
அருணாசலம்
பிக்சர்ஸ்
தை பிறந்தால்
வழி பிறக்கும்

அருணசலம் பிக்சர்ஸ் அளிக்கும்

# தை பிறந்தால் வழி பிறக்கும்

•••oOo•••

இலட்சிய நடிகர்: எஸ், எஸ். ராஜேந்திரன்
V. K. ராமசாமி
பிரேம்
P. ராஜசுலோசன
M. N. ராஜம்
K. N. கமலம்

மற்றும் நடிகர்கள் :

| | |
|---|---|
| P. S. வெங்கிடாசலம் | கரிக்கோல் ராஜு |
| D. V. நாராயணசாமி | ரெங்கராஜு |
| P. S. தட்சிணமூர்த்தி | நடராஜன் |
| K. R. ரத்தினம் | மோகன் |
| T.P. பொன்னுசாமிபிள்ளை | முனுசாமி |
| S. P. வீராச்சாமி | ரெங்கராஜன் |
| S. R. கோபால் | தங்கம் |
| T. N. கிருஷ்ணன் | S. K. வேணுபாய் |
| A. M. மருதப்பா | சாரதாம்பாள் |

★

கதை-வசனம்: ஏ. கே. வேலன்

உதவி: எம். இராசரத்தினம் பி. ஏ.

பாடல்கள் : அ. மருதகாசி
கவிஞர். கண்ணதாசன்
கவிஞர். சுரதா
கு. சா. கிருஷ்ணமூர்த்தி
P. K. முத்துசாமி

சங்கீதம் : K. V. மஹாதேவன்

உதவி : புகழேந்தி

பின்னணி : T. M. செளந்தரராஜன்
சீர்காழி கோவிந்தராஜன்
திருச்சி லோகநாதன்
பொன்னுசாமி & பார்ட்டி
P. லீலா, ஜமுனா ராணி
M. S. ராஜேஸ்வரி
பாலசரஸ்வதி.
ராஜேஸ்வரி & பார்ட்டி

நடன அமைப்பு : P. S. கோபால கிருஷ்ணன்

ஒளிப்பதிவு : V. ராமமூர்த்தி

உதவி : V. துவாரகாநாத், M. G. R. மணி

ஒலிப்பதிவு : E. I. ஜீவா, ரேவதி கண்ணன்

வசனம் : K. N. சண்முகம்

உதவி : N. ராமச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி

மின்சாரம் : C. N. புருஷோத்தமன்

ஆர்ட் : T. V. அண்ணாமலை

M. L. ராயன், மாணிக்கம் } ஸ்டூடியோ

மேக்கப் : T. T. சுந்தரம், தனக்கோடி (ஸ்பெஷல்)

நாராயணசாமி (ஸ்டூடியோ)

உதவி : K. வேலப்பன்

உடை : K. P. சுந்தரம், M. G. நாயுடு (ஸ்பெஷல்)

உதவி : P. S. மாணிக்கம்

புரொடக்ஷன் எக்ஸிகியூட்டிவ்: E. B. ராஜா

உதவி : R. மாதவன், K. M. முனுசாமி, N. கோவிந்தராஜி, C. சதாசிவம், V. மணி.

Script Typed by: M. R. S. மணி

ரீ ரிக்கார்டிங் : E. I. ஜீவா

புராஸஸிங் ; விஜயா லாபரட்டரி By P. M. விஜயராகவலு.

விளம்பரம் : பாலு பிரதர்ஸ்

ஸ்டில்ஸ் : R. N. நாகராஜ ராவ்

உதவி டைரக்ஷன்: எம். இராசரத்தினம் பி.ஏ.

உதவி எடிட்டர் : C. P. S. மணி

எடிட்டர் : V. B நடராஜன்

டைரக்ஷன் : ஏ. கே. வேலன்

ஸ்டுடியோ : பாரமவுண்டு

Recorded on R C A Sound System.

# தை பிறந்தால் வழி பிறக்கும்

## (கதைக் குறிப்பு)

ரெங்கன் : "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்கிறது குறள். ஆனால் விவசாயிகள் ஏழையாகவும், நேர்மைக் குணமும் கொண்டவர்களாக இருந்துவிட்டால் சொக்கநாத முதலியாரைப்போன்ற அரக்க குணம் கொண்டவர்களுக்கு பலியாவதைத்தவிர வேறு வழியேயில்லையா?

மருதி : ஏழை வீட்டிலே பெண்ணாகப் பிறந்துவிட்டாலே துன்பம் தான். பண்ணையாரின் கொடுமை என் அண்ணனை சிறைக்கு அனுப்பிவிட்டது—நானும் அனாதையானேன். இந்த உலகம்தான் எவ்வளவு பொல்லாதது. பாலைவனத்திலே ஒரு சோலைபோல டாக்டர் வரதன் என்னைக் காப்பாற்றி தன் நர்சிங் ஹோமில் வேலையும் கொடுத்தார்—அங்கேயாவது நிம்மதியாக இருக்க முடிந்ததா?

பண்ணையார் : மகனும் மகன்; எனக்கே புத்தி சொல்ல வந்துவிட்டான். வக்கீல் சாரதாவைத்தான் அவனுக்குப் பிடிக்கவில்லை என்றால், நான் பார்த்த பணக்கார வீட்டுப் பெண்ணையும் மறுத்துவிட்டு அனாதை மருதியை கல்யாணம் செய்துகொண்டான். அவள்தான் ஒழுங்காய் இருந்தாளா?

வக்கீல் சாரதா : ஊரே புகழ்கிறது அத்தானை குணக்குன்று என்று. ஆனால் என்னைக் கண்டால்மட்டும் அவருக்கு வெறுப்பு ஏன்? மருதி போயும்கூட அவர் என்னை உதாசீனம் செய்வது ஏன்?

டாக்டர் வரதன் : ரெங்கனிடம் என்னைக் கொல்லும்படி சாரதா கூறி அனுப்பியது ஏன்? என்னையும், மருதியையும், குழந்தையோடு வெளியூருக்குப் போகும்படி ரெங்கன் கூறியது ஏன்? வெளியூர் சென்று திரும்பியவுடன் ரெங்கனும் சாரதாவும் விலங்கோடு நின்றது ஏன்? என் தந்தையின் மனம் மாறியது ஏன்?

# பாடல்கள்

*

## பாட்டு 1.

இயற்றியவர் :
அ. மருதகாசி

பாடியவர்கள் :
சௌந்தரராஜன்
பி. லீலா & பார்ட்டி

தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்
தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம் (தை)

ஆடியிலே வெத வெதைச்சோம் தங்கமே தங்கம்
ஐப்பசியில் களை எடுத்தோம் தங்கமே தங்கம்
கார்த்திகையில் கதிராச்சு தங்கமே தங்கம்
கழனியெல்லாம் பொன்னாச்சு தங்கமே தங்கம் (தை)

கன்னியரின் மனசுபோலே தங்கமே தங்கம்
கல்யாணம் ஆகுமடி தங்கமே தங்கம்
வண்ணமணிக் கைகளிலே தங்கமே தங்கம்
வளையல்களும் குலுங்குமடி தங்கமே தங்கம் (தை)

முத்துச் சம்பா நெல்லுகுத்தி தங்கமே தங்கம்
முத்தத்திலே சோறு பொங்கி தங்கமே தங்கம்
குத்துவிளக் கேத்தி வச்சு தங்கமே தங்கம்
கொண்டாடி மகிழ்ந் திடுவோம் தங்கமே தங்கம் (தை)

## பாட்டு 2.

இயற்றியவர் :
அ. மருதகாசி

பாடியவர் :
சீர்காழி-கோவிந்தராஜன்
ஜமுனா ராணி

ஆண் :
சொல்லட்டுமா ? சொல்லட்டுமா ?
ரகசியத்தை சொல்லட்டுமா ?
துள்ளியோடும் காளைகளா
உள்ளபடி சொல்லட்டுமா ? (சொல்)

உள்ளத்து ஆசைகளை
சொல்லாமல் மறைச்சாலும்
கண்ணாடிபோல முகம்
தன்னாலே காட்டிவிடும் (சொல்)

பெண் :
சொல்லட்டுமா ? சொல்லட்டுமா ?
ரகசியத்தை சொல்லட்டுமா ?
துள்ளியோடும் காளைகளா
உள்ளபடி சொல்லட்டுமா ? (சொல்)

தன்முதுகு ஒருபோதும்
தனக்கேதான் தெரியாது
பிறர் என்றால் நையாண்டி
பேசுகின்ற உலகமிது (சொல்)

ஆண் :
அருமையாக வளர்த்தாலும்
வரிசைவம்மை கொடுத்தாலும்
புருஷன் வந்த கையோடே
பொறந்தவிடு மறந்துவிடும் (சொல்)

பெண் : "எங்கிருந்தோ" வந்திடுவா
"இந்தாங்க" என்றிடுவா
'இம்' மென்னும் முன்னாலே
எண்ணிக்கோ என்பாரு
ஒண்ணு, ரெண்டு, மூணு (சொல்)

ஆண் : நாளைக்கு உன் நடப்பும்
இதுதானா தங்கச்சி (சொல்)

பெண் : அட! நமக்குள்ளே வீண்பேச்சு
எதுக்குங்க அண்ணாச்சி

ஆண் : பலே! அப்படி வா தங்கச்சி

இருவரும் : சொல்லட்டுமா? சொல்லட்டுமா?
ரகசியத்தை சொல்லட்டுமா?
துள்ளியோடும் காளைகளா
உள்ளபடி சொல்லட்டுமா? (சொல்)

## பாட்டு 3.

இயற்றியவர் : அ. மருதகாசி

பாடியவர் : சீர்காழி-கோவிந்தராஜன்

பொல்லாதோர் சூழ்ச்சிப் புயலின் கொடுமையிலே
நல்லவர்கள் வாழ்க்கை நலம் மாறிப் போகுதே
உள்ளம் உடைந்தே உடன்பிறந்தானைப் பிரிந்தே
வெள்ளம்போல் பேதை விழி மழையைக் கொட்டுதே.

செல்லக் கிளிக்கான சீர்வரிசை அத்தனையும்
தொல்லை கொடுப்பவர்க்கே சொந்தமாய்ப் போனதே
இல்லாதார் வாழ்க்கையிலே இத்தனைத் துன்பமோ
இந்தநிலை மாறாமல் இன்பநிலை உண்டாமோ ?

இன்பநிலை உண்டாமோ ?

## பாட்டு 4.

இயற்றியவர் :
கு. சா. கிருஷ்ணமூர்த்தி

பாடியவர்கள் :
சௌந்தரராஜன்
பாலசரஸ்வதி

ஆண் : எளியோரைத் தாழ்த்தி
வலியோரை வாழ்த்தும்
உலகே உன் செயல்தான் மாறாதா? (எளி)

பெண் : பரிதாபம் நெஞ்சில் சிறிதேனும் இல்லா
படுபாவியால் வாழ்வு பறிபோவதோ

ஆண் : அறியாத நங்கை எனதாசைத் தங்கை
கதியேதும் காணாமல் மனம் நோவதோ (எளி)

பெண் : சிறகே இல்லாத கிளிபோல ஏங்கி
உனைக் காணவே என்உளம் வாடுதே.

ஆண் : பறந்தோடி வந்துன் குறைதீர்க்க என்னைச்
சிறைக்காவல் இங்கே தடை போடுதே. (எளி)

## பாட்டு 5.

இயற்றியவர் :
**கவிஞர் சுரதா**

பாடியவர் :
**சீர்காழி கோவிந்தராஜன்**

அமுதும் தேனும் எதற்கு—நீ
அருகினில் இருக்கையிலே எனக்கு (அமுது)

அருவி தரும் குளிர்நீர் அன்பே இனிமேல்
பிரிந்தால் சுடுநீர் ஆகும் நமக்கு (அமுது)

நிலவின் நிழலோ உன் வதனம்—புது
நிலைக் கண்ணாடியோ மின்னும் கன்னம்
மலையில் பிறவா மாமணியே—நான்
கொய்யும் கொய்யாக் கனியே (வானமுதும்)

விழியாலே காதல் கதை பேசு
மலர்க் கையாலே சந்தனம் பூசு—தமிழ்
மொழிபோலே சுவையூட்டும் செந்தேனே
உடல்நான், உயிர்நீ, தானே. (வானமுதும்)

## பாட்டு 6.

இயற்றியவர் : | பாடியவர் :
---|---
விஞர் கண்ணதாசன் | திருச்சி லோகநாதன்

ஆசையே! அலைபோலே
நாமெலாம் அதன் மேலே
ஓடம் போலே ஆடிடுவோமே வாழ்நாளிலே (ஆசை)

பருவம் என்னும் காற்றிலே
பறக்கும் காதல் தேரிலே
ஆணும் பெண்ணும் மகிழ்வார்
சுகம் பெறுவார்
அதிசயம் காண்பார்
நாளை உலகின் பாதையை இன்றே யார் காணுவார்
(ஆசை)

வாழ்க்கை எல்லாம் தீர்ந்ததே
வடிவம் மட்டும் வாழ்வதேன்
இளமை மீண்டும் வருமா
மணம் பெறுமா
முதுமையே சுகமா
காலம் போகும் பாதையை இங்கே யார் காணுவார்
(ஆசை)

சூறைக் காற்று மோதினல்
தோணி ஓட்டம் மேவுமோ
வாழ்வில் துன்பம் வரவு
சுகம் செலவு
இருப்பது கனவு
காலம் வகுத்த கணக்கை இங்கே யார் காணுவார்
(ஆசை)

## பாட்டு 7.

தொகுத்தவர் :
பி. கே. முத்துசாமி

பாடியவர் :
எம். எஸ். ராஜேஸ்வரி

மண்ணுக்கு மரம் பாரமா
மரத்துக்கு இலை பாரமா
கொடிக்கு காய் பாரமா—பெற்றெடுத்த
குழந்தை தாய்க்கு பாரமா (மண்)

வாடிய நாளெல்லாம்
வருந்தி வருந்தித் தவமிருந்து
தேடிய நாள் தன்னில்
செல்வமாய் வந்தவளே (மண்)

மலடி மலடி என்று
வையகத்தார் ஏசாமல்
தாயென்ற பெருமைதனை
மனம் குளிரத் தந்தவளே

கொடிக்கு காய் பாரமா ?—பெற்றெடுத்த
குழந்தை தாய்க்கு பாரமா ? (மண்)

அழுதால் அரும்புதிரும்
அண்ணாந்தால் பொன்னுதிரும்
சிரிச்சால் முத்துதிரும்
வாய்திறந்தால் தேன்சிதறும்

பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா
பேணி வளர்க்கவேணும் தெரியுமா
அல்லலைக் கண்டு மனசு அஞ்சுமா
குழந்தை அழுவதைக் கேட்டு மனசு மிஞ்சுமா?
(மண்ணுக்கு)

## பாட்டு 8.

இயற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர் :
ஜமுனா ராணி

காலம் சிறிது கனவுகள் பெரிது
கவலைப் படுவதேன் மனது
கோல யௌவனம் கொஞ்சும் மோகனம்
குறைவ தென்றுமே அரிது! (காலம்)

ஒன்று போனபின் ஒன்று இதில்
உறவும் காதலும் உண்டு
சென்ற காலங்கள் சென்று வாழ்வில்
வந்த காலமே நன்று! நன்று! (காலம்)

முத்துக் குறுநகை ரத்தின இதழ்கள்
மூட்டும் புன்னகை பாராய்
சித்தக் கடலினை தொட்டுத் தழுவியே
செல்வ சுகம்பெற வாராய்! வாராய்! (காலம்)

எத்தனை காலம் உனக்கென இங்கே
ஏங்கி உருகுது பெண்மை
இத்தனை காலம் மறந்தாய் இனிமேல்
இங்கு காணுவாய் உண்மை! உண்மை! (காலம்)

இனிமை இனிமையைத் தருமோ
இனிமை என்றுமே வருமோ

## பாட்டு 9.

இயற்றியவர் : அ. மருதகாசி

பாடியவர் : சௌந்தரராஜன்

நேரங்கெட்ட நேரத்திலே
ஊரைவிட்டு தூரத்திலே
காரோட்டி வந்து சும்மா
காத்து வாங்கும் செல்லக்குட்டி—செல்லக்குட்டி
நினைச்சது ஒண்ணு
நடந்தது ஒண்ணு
அதனாலே முழிக்குதே அம்மாப் பொண்ணு
—நினைச்சது

கணக்கும் தவறாகிப் போனதினாலே
கவலை கொள்ளுதே தனியா நின்னு
—நினைச்சது

வெள்ளி நிலவெரிக்க
வீட்டுக்குள்ளே நானிருக்க
தள்ளிக் கதவடைச்சு
சொல்லாமே வந்தவளே
—நினைச்சது

ஏ! பட்டணத்து தங்கக்கட்டி சேடப்
பட்டிக்காட்டு சிங்கக்குட்டி நீ
படிப்பும் நடிப்பும் காட்டி ஏய்க்க
முடிஞ்சுதா சொல்லு குட்டி! ஏகுட்டி!
—நினைச்சது

கணக்கும் தவறாகிப் போனதினாலே
கவலை கொள்ளுதே தனியா நின்னு
—நினைச்சது


மதுரை மீனட்ச
S.S. ராஜேந்திரன் நடிக்கும்